தினமலர்

**நீர்வள மேம்பாட்டு தேசிய கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2011,01:21 IST

தர்மபுரி: தர்மபுரி நல்லானூர் ஜெயம் இன்ஜினியரிங் கல்லூரி, பெங்களூர் இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகம் இணைந்து "தொடு உணர்வு மற்றும் புவி தகவல் பரிமாற்ற' முறையில் நீர்வள மேம்பாட்டு நிர்வாகவியல் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கு கல்லூரி கூட்டரங்கில் நடந்தது. கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி சுகுமாரன் தலைமை வகித்தார். அறங்காவலர் மற்றும் இயக்குனர் பார்வதி ரமேஷ் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் தொல்காப்பியஅரசு வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக பெங்களூரு இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழக துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கலந்துகொண்டு பேசியதாவது: நகரமயமாக்கல், தொழிற்சாலைகள் வளர்ச்சி, தனி நபர் வருமானத்தில் ஏற்படுகிற வித்யாசம், விவசாய சாகுபடியில் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சரியாக செய்யாமை என பல காரணங்களால் நீர்வளம் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஒருங்கிணைந்த நீர்வள நிர்வாகம் குறிப்பாக அணை நீர்பிடிப்பு பகுதிகளில் முறையான நீர் வள நிர்வாகத்துடன் நாட்டில் சீரான பொருளாதார முறையான நீர் வள நிர்வாகத்துடன் நாட்டில் சீரான பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டால் நீர்வள பற்றாக்குறை எற்படுவது குறையும்.

இயற்கை வளங்களை சீரிய முறையில் எப்படி நிர்வாகம் செய்வது குறித்து பல நாடுகளில் விண்வெளி ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இந்தியாவில் விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் இதற்கான தகவல்களை திரட்டுவதற்கான ஆராய்ச்சி பணிகளுக்கு 78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது என்றார். வேலூர் மாவட்ட வேளாண் அலுவலர் மாதவன், கல்லூரி கட்டிடவியல் துறைத்தலைவர் செந்தில்குமார் நன்றி கூறினார். கருத்தரங்க ஏற்பாடுகளை கருத்தரங்க அமைப்பு செயலாளர் கருணாநிதி மற்றும் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

**தேங்காய் பருப்பு விலை ரூ. 6 உயர்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2011,03:01 IST

கோபிசெட்டிபாளையம்: தேங்காய் எண்ணெய்க்கு விலை உயர்வு மற்றும் தேங்காய் உற்பத்தி குறைவால் தேங்காய் பருப்பு கிலோவுக்கு ஒரே வாரத்தில் ஆறு ரூபாய் வரை விலை உயர்ந்தது. செப்டம்பர் மாதம் முதல் எண்ணெய் விலையில் அடிக்கடி ஏற்படும் மாற்றம், தேங்காய் உற்பத்தி குறைவால் தேங்காய் பருப்பு விலை தாறுமாறாக ஏற்றம் இறக்கங்களை சந்தித்து வருகிறது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு, சென்ற வாரம் 109 மூட்டை தேங்காய் பருப்பு வந்தது. நடப்பு வாரம் 124 மூட்டை வந்தது. அதிகபட்சமாக கிலோ 65.11 ரூபாய், குறைந்தபட்சமாக 63.91 ரூபாய், சராசரியாக 64.91 ரூபாய்க்கு விற்றது. சென்ற வாரத்தை விட தேங்காய் பருப்பு கிலோவுக்கு ஆறு ரூபாய் 32 பைசா வரை விலை உயர்ந்தது. 15 லிட்டர் எடை கொண்ட தேங்காய் எண்ணை டின்னுக்கு 20 ரூபாய் வரை விலை அதிகம் ஏற்பட்டுள்ளதால், தேங்காய் பருப்புக்கும் நடப்பு வாரம் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சீரான மின் விநியோகம் செய்ய வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2011,02:45 IST

ஈரோடு: தடையின்றி சீராக மின்சாரம் வழங்க விவசாய சங்கம் அரசை வலியுறுத்தி உள்ளது. தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் ரத்தினசாமி கூறியதாவது: தமிழகத்தில் கோடை துவங்கியுள்ள நிலையில் வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளது. ஆனால், தற்போது எந்தவித வரைமுறையும் இல்லாமல் மின்சாரம் நிறுத்தப்படுகிறது. கரும்பு, மஞ்சள், வாழை, தென்னை மற்றும் இதர காய்கறிப்பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு பேரிழப்பு ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. பல கிராமங்களில் குடிநீர் விநியோகத்தில் கூட கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கல்பாக்கம், நெய்வேலி, மேட்டூர், கூடங்குளம், தூத்துக்குடி போன்ற மின் உற்பத்தி நிலையங்கள் 100 சதவீதம் மின் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மின்தேவையை கருத்தில் கொண்டு, மத்திய, தென்னக மின் தொகுப்பில் இருந்து தமிழகத்தின் தேவைக்கேற்ப கூடுதல் மின்சாரம் கேட்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**ஸ்ரீவி.,யில் வீசிய பலத்த சூறாவளி காற்றால் பாதிப்பு : மா, வாழை விவசாயிகளுக்கு கடும் நஷ்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2011,23:03 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூரில் நேற்று முன் தினம் வீசிய சூறாவாளி காற்றில் வாழை, மாங்காய், எலுமிச்சை சேதம் அடைந்தன. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
ஸ்ரீவி., செண்பகதோப்பு, திருவண்ணாமலை பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் மா மரங்கள் உள்ளது. கடந்தாண்டு சரி வர மழை இல்லாததால் மாங்காய்கள் காய்ப்பதில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் குத்தகைக்கு எடுத்த விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். கடந்த நவம்பரில் பெய்த மழையால் பிப்ரவரியில் மா மரங்களில் பூக்கள் பூத்தன. இந்தாண்டு அதிக விளைச்சல் கிடைக்கும் என விவசாயிகள் நம்பி இருந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு ஸ்ரீவில்லிபுத்தூர், செண்பகதோப்பு பகுதிகளில் சூறாவளி காற்று வீசியது. இதில் மா, மற்றும் எலுமிச்சை, தென்னை, வாழைகள் சேதமடைந்தன.
விவசாயி கந்தையா கூறியதாவது: சூறாவளியால் பல லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. உதிர்ந்த விளை பொருட்களை மார்க்கெட்டிற்கு கொண்டு சென்றால் கிலோவிற்கு 4 ரூபாய் கூட கிடைக்காது, என்றார்.
விவசாயி கருப்பையா கூறியதாவது: ஐந்து ஏக்கரில் வாழை பயிரிட்டிருந்தேன். குலை தள்ளிய நிலையில் பலத்த சூறாவளி காற்றால் மரங்கள் வேரோடு சாய்ந்து சேதம் கடுமையாக உள்ளது. பதினைந்து ஆண்டுகளுக்கு பின் வீசிய கடும் சூறாவளியால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது, என்றார்.

**படித்த வேலை இல்லா இளைஞர்களுக்கு 50 சதவீத மானியத்தில் எந்திரங்கள் தேயிலை வாரியம் அறிவிப்பு**

குன்னூர், மார்ச்.26–

படித்த வேலை இல்லா இளைஞர்களுக்கு 50 சதவீத மானியத்தில் எந்திரங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப் பட உள்ளதாக தேயிலை வாரியம், உபாசி வேளாண்மை அறிவியல் மையம் அறிவித்துள் ளது.

மானியத்தில் எந்திரங்கள்

தேயிலை வாரியம், உபாசி வேளாண்மை அறிவியல் மையம் ஆகியவை இணைந்து, தேயிலை குறித்த செய்தி குறிப்பு ஒன்றை வெளியிட்டு உள்ளன. அதில் கூறப்பட்டுள்ளதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் 65 ஆயிரம் சிறுவிவசாயிகள், சுமார் 1 லட்சத்து 12 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை சாகுபடியை மேற் கொண்டு வருகின்றனர். தேயிலை செடியில் கொழுந்து பறித்தல், கவாத்து செய்தல், மருந்து தெளித்தல் போன்றவை முக்கியமான சாகுபடிகள் முறைகள் ஆகும்.

ஆட்கள் கிடைக்காத நிலை

சமீபகாலமாக தேயிலை செடிகளில் பச்சை தேயிலை கொழுந்து பறிப்பதற்கு ஆட் கள் கிடைக்காத நிலை உள் ளது. இதன் காரணமாக பல தேயிலை தோட்டங்களில் சரி யான தருணத்தில் பச்சை தேயிலை கொழுந்து பறிக்க முடியாமல், தேயிலை இலை வீணாகிறது. இதனால் முற்றிய நிலையில் இலை பறிப்பதால், தரமற்ற தேயிலை தூள் தயாரிக் கப்பட்டு, விலை வீழ்ச்சி ஏற்ப டும் நிலை உருவாகி உள்ளது. இதை சரி செய்ய எந்திரத்தை கொண்டு, தேயிலை செடிகளில் கொழுந்து பறிக்கலாம்.

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை கவாத்து செய்து முக்கியமானது ஆகும். கவாத்து செய்வதற்கு ஆட்கள் குறைவாக உள்ளதால், சரியான தருணத்தில் கவாத்து செய்ய முடிவது இல்லை. கவாத்து எந்திரத்தை பயன் படுத்தி, செடிகள் வெட்டுவ துன் மூலம் சரியான பருவத் தில் கவாத்து செய்யலாம்.

மேலும் தேயிலைக்கு மருந்து, வளர்ச்சி ஊக்கிகள் தெளிப் பதன் மூலம் மகசூலை அதிக

*ரிக்கலாம். இதனை சரி வர செய்ய தெளிப்பான்கள் தேவைப்படுகிறது. மேற் கூறிய வற்றை கருத்தில் இந்த திட்டத் தில் சிறு மற்றும் குறு தேயிலை விவசாயிகள் தேயிலை தோட் டத்தின் பராமரிப்புக்காக, தேயிலை பறிக்கும் எந்திரம், கவாத்து எந்திரம், தெளிப்பான் கள் ஆகியவை 50 சதவீத மானியத்தில் வழங்கப்படு கிறது.*

*இதன் மூலம் வேலை இல்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதிப்படுத்தவும், தனிநபர் வருமானத்தை பெருக்கவும், துரித வளர்ச்சி பருவ காலங்களில் ஆட்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், இலை எடுக்கும் அளவை அதிகப்படுத்தவும் இந்த திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது.*

*முன்னுரிமை*

*இந்த திட்டத்தில் பயன் பெறும் படித்த வேலை இல்லா இளைஞர்களின் வயது 18 முதல் 40க்குள் இருக்க வேண்டும். வயதுக்கான சான்றிதழ், விண்ணப்பிக்கும் போது இணைக்க வேண்டும். எந்த நிறுவனத்தில் இருந்து எந்திரங்கள் பெறுகின்றாரோ? அதற்கான விலை பட்டியல் இணைக்க வேண்டும். சுய உதவிக்குழுவோ அல்லது சங்கங்களோ இருந்தாலும், சிறு விவசாயிகளாக இருந் தாலும் பெயர் பட்டியல் இணைக்கப்பட வேண்டும். இந்த திட்டத்தில் பயன் பெற முதலில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.*

## வெயிலுக்கு இதமாக இளநீர்



கோவையில் கோடை வெயில் வறுத்து எடுக்கிறது. இதனால் சாலையோரங்களில் குளிர் பான கடைகளும் தர்ப்பூசணி மற்றும் இளநீர் கடைகளும் பெருகி வருகின்றன. கோவை மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள ஒரு இளநீர் கடையில் பெண்கள் இளநீர் அருந்துவதை படத்தில் காணலாம்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**
வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,780–2,800

**மணிலா பயறு**
80 கிலோ கொண்ட மூட்டை
3,475–3,575

**கடலை எண்ணெய்**
ஒரு குவிண்டால் (வரி உள்பட)
7,350–00

**கடலை புண்ணாக்கு**
70 கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட) 1,425–00

**தேங்காய் எண்ணெய்**
15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரி உள்பட) 1,780–00

**நல்லெண்ணெய்**
குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1 குவிண்டால் (வரி உள்பட) 11,500–00
டின் (15 கிலோ) 1,700–00

**விளக்கெண்ணெய்**
ஒரு குவிண்டால் (வரி உள்பட)
11,200.00
15 கிலோ டின் (வரி உள்பட) 1,700–00

**சூரியகாந்தி எண்ணெய்**
சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரி உள்பட) 1,135.00

**ரீபைண்டு ஆயில்**
(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின் (வரி உள்பட) 1,310.00

**வனஸ்பதி**
டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,095.00

**பாமாயில்**
10 கிலோ டின் (வரி தனி) 550–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை, மார்ச்.25–
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்பு வகைகள் | 100 கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| கபருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உருந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உபருப்பு (வெள்ளை) | ரூ. 6,500 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (நுவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| கபருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை, மார்ச்.25–
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விலரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 12,513
2. ஜெயதர் 22 எம்.எ ரூ. 17915
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 16,473
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 16,028
5. சங்கர் 6 28 எம்.எம், புதியது ரூ. 17,153
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 23,058
7. டி.சி.எச். 32 34 எம்.எம், (கர்நாடகா) புதுக ரூ. 22,918

## எண்ணை மார்க்கெட்

கோவை, மார்ச்.25–
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15 கிலோ) | (1 லிட்டர்) சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 84.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1100 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1160 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | (–) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1420 | 1020.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,700 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,000 | 59.00 |
| கடலைஎண்ணை வள்ளல்பிராண்டு | ரூ. 1,200 | 80.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,275 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,025 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,080 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | – |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:–

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.400.00 | ரூ. 450.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 2.00 | ரூ. 4.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.10.00 | ரூ.16.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.4.00 | ரூ.7.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.3.00 | ரூ.5.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.9.00 | ரூ.15.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.5.00 | ரூ.8.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.5.00 | ரூ.8.00 |
| மேராக்காய் | ரூ.8.00 | ரூ.10.00 |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.208.00 | அதிகபட்சவிலை | ரூ.262.00 |
| சராசரி விலை | ரூ.197.00 | சராசரி விலை | ரூ.244.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.176.00 | குறைந்தபட்சவிலை | ரூ.211.00 |

**பட்டு நூல் ரூ.1,958**

## கோவை உழவர் சந்தை

கோவை, மார்ச்.25–
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

### காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 66–00 | காலிப்பிளவர் | ரூ. | 12–14 |
| கத்தரிக்காய் | ரூ. | 18–20 | பொறியல் தட்டை | ரூ. | 14–16 |
| வெண்டைக்காய் | ரூ. | 10–11 | பச்சை மொச்சை | ரூ. | 28–00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5–00 | தேங்காய் | ரூ. | 12–13 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6–00 | பட்டாணி | ரூ. | 40–45 |
| புடலை | ரூ. | 8–12 | பூண்டு | ரூ. | 130 –00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 18–20 | கறிவேப்பிலை | ரூ. | 30–32 |
| சுரைக்காய் | ரூ. | 8–10 | அகத்தி | ரூ. | 14–00 |
| பாகற்காய் | ரூ. | 14–15 | வாழைக்காய் | ரூ. | 14–00 |
| கொத்தவரை | ரூ. | 12–14 | திராட்சை | ரூ. | 49–00 |
| பூசணிக்காய் | ரூ. | 14–16 | திராட்சை (பச்சை) | ரூ. | 66–70 |
| அரசாணிக்காய் | ரூ. | 8–10 | குடைமிளகாய் | ரூ. | 32–00 |
| மேராக்காய் | ரூ. | 18–00 | சாதா பீன்ஸ் | ரூ. | 16–00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 30–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20–00 | கறிபீன்ஸ் | ரூ. | 22–24 |
| சின்னவெங்காயம் | ரூ. | 16–18 | புஸ்பீன்ஸ் | ரூ. | 22–24 |
| பெரியவெங்காயம் | ரூ. | 10–00 | காளான் | ரூ. | 80–140 |
| இஞ்சி | ரூ. | 32–00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10–13 |
| முருங்கைக்காய் | ரூ. | 24–00 | சப்போட்டா1கிலோ | ரூ. | 15–16 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 15–16 | கொய்யா1கிலோ | ரூ. | 22–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 20–00 | மாதுளை1கிலோ | ரூ. | 170–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15–16 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | ஆப்பிள் | ரூ. | 115–00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | சாத்துக்குடி | ரூ. | 8–30 |
| சிறுகிழங்கு | ரூ. | 30–00 | நெல்லிக்காய் | ரூ. | 30–45 |
| முள்ளங்கி | ரூ. | 9–12 | ஆரஞ்சு | ரூ. | 45–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 24–00 | வெள்ளரி | ரூ. | 17–26 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 8–9 | புளி 1 கிலோ | ரூ. | 80–00 |
| நூல்கோல் | ரூ. | 16–00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32–00 |
| கொத்தமல்லி | ரூ. | 20–28 | அவரை | ரூ. | 10–12 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 16–00 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| முட்டைகோஸ் | ரூ. | 8–10 | மக்காச்சோளம் | ரூ. | 18–00 |
| காலிகோஸ் | ரூ. | 16–00 | தர்பூசணி | ரூ. | 10–00 |
| புதினா | ரூ. | 16–00 | சீத்தாபழம் | ரூ. | 20–00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.21600 |
| மிளகு (சேட்டன்) | ரூ.22000 |
| மிளகு (வயநாடன்) | ரூ.22200 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 8500 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 8300 |
| சுக்கு(புதியது) | ரூ.15000 |
| சுக்கு(பழையது) | ரூ.10100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1200 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1000 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.9590 |
| கொப்பரை நாடன் | ரூ.6450 |
| கொப்பரை ராசு | ரூ.6600 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6325 |
| கொப்பரை ராஜிப்பு | ரூ.6200 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6850 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21800 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22500 |
| ரப்பர் பால் | ரூ. 16200 |
| காப்பி | ரூ. 9400 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 2850 |
| நேந்திரகாய் | ரூ. 1300 |
| இஞ்சி | ரூ. 1600 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,592.00 | 15584.00 | 15600.00 |
| ஒரு கிராம் | 1,949.00 | 1,948.00 | 1,950.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 55,830.00 | 59,900.00 | 60,000.00 |
| ஒரு கிராம் | 59.75 | 59.90 | 60.00 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

**மஞ்சள் (கோவை)**

| | |
|---|---|
| தனிவிரலி | ரூ.8630–10262 |
| தனிகிழங்கு | ரூ.8306–9526 |

**மக்காய்ச்சோளம்**

| | |
|---|---|
| மடத்துக்குளம் | ரூ.1140–1150 |

**சோளம்**

| | |
|---|---|
| திருப்பூர் | ரூ.1300–1800 |

**தேங்காய்**

| | |
|---|---|
| தொண்டாமுத்தூர் | ரூ.600–700 |
| ஆனைமலை | ரூ.500–700 |
| பொள்ளாச்சி | ரூ.500–900 |
| மடத்துக்குளம் | ரூ.500–600 |
| நெகமம் | ரூ.500–700 |

**தேங்காய் பருப்பு**

| | |
|---|---|
| நெகமம் (I தரம்) | ரூ.6010–6110 |
| நெகமம் (II தரம்) | ரூ.3000–5875 |

**தினகரன்**

## தேர்தல் கெடுபிடியும் காரணம் பூக்கள் விலை குறைந்தது மல்லிகை கிலோ ஸி 50



நெல்லை: நெல்லையில் பூக்களின் விலை வெகுவாக குறைந்தது. வரத்து அதிகம் உள்ளதாலும், தேர்தல் கமிஷன் கெடுபிடியால் மாலைகள் வாங்க கட்சியினர் தயங்குவதும் விலை குறைவுக்கு காரணமாக கூறப்படுகிறது. நெல்லையில் கடந்த மாதம் மல்லிகை கிலோ
ஸி 150 வரை விற்றது. இதே போல் மற்ற பூக்களின் விலையும் உச்சத்திலிருந்தது. இதனால் பூக்களை வாங்குபவர்களின் எண்ணிக்கை கு றைவாக இருந்தது.

இந்நிலையில் மல்லிகை, பிச்சி பூக்களின் வரத்து தற்போது அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. நெல்லையில் மல்லிகை நேற்று கிலோ ஸி 40 முதல்
ஸி 50 வரை விற்கப்பட்டது. விலை குறைந்த போதிலும் பூக்களை வாங்க மக்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

வேட்பாளர்களை வரவேற்க முன்பெல்லாம் மாலை, சால்வைகள் அதிகம் அணிவிக்கப்படும். ஆனால் இம்முறை மாலை, சால்வைகள் கூட வேட்பாளர்களின் செலவு கணக்கில் சேர்க்கப்ப டும் என தேர்தல் கமிஷன் கெடுபிடி செய்வதால் மாலை, சால்வை அணிவிப்பதை கட்சியினர் தவிர்த்து வருகின்றனர்.